பதிவு எண் : M. 6311 ★ தொலைபேசி : 51331 ★ நிறுவியது : 1953 ★ விலை 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

நம்நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K.

ஆசிரியர் : இரா. செழியன் எம்.ஏ. எம்.பி.

மலர் : 16] சென்னை : கார்த்திகை 28 (13—12—68) வெள்ளி ★ வெளியூர் : கார்த்திகை 29 (14—12—68) சனி [இதழ் : 149

விலைகளில் வீழ்ச்சி

சென்னை, டிச. 13—

நவம்பர் 30-ம் நாளுடன் முடிந்த வாரத்தில், சென்னை நகரில் தொழிலாளர் பிரிவினருக்கான வாழ்க்கைச் செலவுப் புள்ளி, நான்கு புள்ளிகள் குறைந்து 636-ல் நின்றது.

பருப்பு, புளி, மிளகாய், நல்லெண்ணெய், காய்கறிகள் இவற்றின் விலை இறங்கியதே இதற்குக் காரணம்.

‘எதற்கும் கிளர்ச்சியில் இறங்காதீர்’

‘கல்வியை பாதிக்கும் வேலை நிறுத்தங்கள் வேண்டாம்’

‘தவறான பிரசாரங்கட்கு ஆட்படாமல் படிப்பில் அக்கறை செலுத்துவீர்’

தமிழக மாணவர்களுக்கு கல்வியமைச்சர் இரா. நெடுஞ்செழியன் வேண்டுகோள்

மதுரை, டிச. 13—

தங்கள் கிளர்ச்சி நடவடிக்கைகளையெல்லாம் நிறுத்திவிட்டு வகுப்புகளுக்கு வருமாறு கல்வியமைச்சர் திரு. இரா. நெடுஞ்செழியன், தமிழக மாணவர்களைக் கேட்டுக் கொண்டுள்ளார். அவர் மேலும் கூறியதாவது :—

"தமிழகத்தில், அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திலானாலும் சரி -- அரியலூரிலானாலும் சரி -- சாதாரண சிறிய பிரச்சினைக்குக்கூட மாணவர்கள் போராட்டத்தில் இறங்கிவிடுகிறார்கள்.

மாணவர்கள் இன்னும் அதிகமாகத் தங்களுக்குத் தாங்களே கட்டுப்பாட்டினையும் ஒழுங்கையும் ஏற்படுத்திக்கொண்டு, நடுநிலையில் இயங்கவேண்டும். கல்வியைப் பாதிக்கக்கூடிய வகையில், காலவரையற்ற வேலை நிறுத்தங்களில் ஈடுபடக் கூடாது; அரசியல் கட்சிகளின் பிரச்சாரங்கட்குத் தங்களை ஆட்படுத்திக் கொள்ளக் கூடாது.

மாணவர்கள் வேலை நிறுத்தம் காரணமாக மாநிலத்தின் பல்வேறு இடங்களிலும் உள்ள கல்லூரிகளும் மூடப்பட்டுள்ளன; கூடிய விரைவில், நிலைமை கட்டுக்கடங்கியவுடன் அவை திறக்கப்பட்டுவிடும்.

மாணவர்கள் நடத்தும் போராட்டங்களைச் சமாளிப்பது இக்கட்டானதொரு பிரச்சினையாகும். அதனை மிக எச்சரிக்கையாகவும், நடுநிலை நின்று அணுக வேண்டியுள்ளது.

பத்திரிகைகளில் வரும் தவறான செய்திகளின் விளைவாக மாணவர்கள் தவறான நடவடிக்கைகளில் ஈடுபட நேரிடுவதால், தவறான செய்திகளை வெளியிடாதிருக்குமாறு பத்திரிகைக்காரர்களையும் கேட்டுக்கொள்கிறேன்.

ஓராசிரியர் இந்திப் பள்ளிகளை மூடவேண்டும் என்று மாணவர்கள் எழுப்பும் கோரிக்கைக்கு அடிப்படையே இல்லை; அப்படிப்பட்ட பள்ளிகள் எதுவும் இப்போது தமிழகத்தில் இல்லை; அத்தகைய பள்ளிகளைத் திறப்பது பற்றிப் பேச்சு எழுந்தது; ஆனால் அது வெறும் உத்தேசக் கட்டத்திலேயே இருந்து வருகிறது.

எனவே, தவறான பத்திரிகைச் செய்திகளுக்கு ஆட்படவேண்டாம் என்று மாணவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

வானொலியில் இந்திச் செய்தி அறிக்கைக்கு முக்கிய இடம் கொடுத்திருப்பது இந்த மாநிலத்தில் நிலவும் அமைதியைக் குலைக்க வழிகோலுமாகையால், செய்தியறிக்கை ஒலிபரப்பப்படுவதில் இதுவரை இருந்துவந்த நிலைமையையே நீடித்திருக்கச் செய்ய மத்திய அரசு ஆவன செய்யும் என்று நம்புகிறோம்.''

பரிசீலனை கட்டத்திலேயே உள்ளது- இன்னும் முடிவெடுத்துவிடவில்லை

கம்பவுண்டரை சிகிச்சை செய்ய அனுமதிப்பது பற்றிக் கல்வியமைச்சர் விளக்கம்

மதுரை, டிச. 13—

"அனுபவம் வாய்ந்த கம்பவுண்டர்களும், பார்மசிஸ்டுகளும் டாக்டர்களாகத் தொழில் நடத்த அனுமதிபபது சம்பந்தமான மத்திய சுகாதாரக் குழுவின் முடிவை மாநில அரசு பரிசீலித்து வருகிறதேயன்றி அந்தக் குழுவின் முடிவை ஏற்றுக்கொண்டுவிடவில்லை"

என்று கல்வியமைச்சர் இரா. நெடுஞ்செழியன் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்; இது சம்பந்தமாக மாநில சுகாதாரத்துறை அதிகாரி ஒருவர் தெரிவித்த கருத்தையும் அமைச்சர் குறிப்பிட்டார்.

அண்ணா சிகிச்சை நிதிக்கு ரூ. 26,715!

திருச்சி மாவட்ட மக்கள் காணிக்கை

ஒரே நாளில் கருணாநிதியிடம் அளிக்கப்பட்டது

திருச்சி, டிச. 13—

திருச்சி மாவட்டத்தில் நேற்று கருணாநிதி அவர்கள் கலந்துகொண்ட நிகழ்ச்சிகளில் பேரறிஞர் அண்ணா அவர்களின் சிகிச்சை நிதிக்காக ரூ. 26,715 வசூலாகியுள்ளது.

திரு கருணாநிதி நேற்று திருச்சி மாவட்டத்தில் பல நிகழ்ச்சிகளில் கலந்துகொண்டார். இந்நிகழ்ச்சிகளில் அண்ணா சிகிச்சை நிதி வசூலாகியது.

திருச்சி மாவட்டத்தில் நேற்று ஒரே நாளில் ரூ. 26,715 வசூலான விவரம் வருமாறு :—

திருச்சியில் நடந்த காலை நிகழ்ச்சியில் திருச்சி மாவட்டச் செயலாளர் அன்பில் தருமலிங்கம் மூலம் கிடைத்த தொகை ரூ. 12,000.

இதைத் தொடர்ந்து பல வட்டங்களின் மூலமும், கழக எம்.எல்.ஏ.-க்கள், எம்.எல்.சி.-க்கள் மூலம் கிடைத்த தொகை ரூ 5,000.

கரூர் பொதுக்கூட்டத்தில் கிடைத்த தொகை ரூ. 9,755.

முந்திய நாள் தஞ்சை மாவட்டத்தில் ஒரே நாளில் ரூ. 25,665 அண்ணா சிகிச்சை நிதிக்காக அளிக்கப்பட்டது தெரிந்ததே.

‘மாநில அரசின் விவகாரத்தில் தலையிட வேண்டாம்’

டில்லிக்குத் தமிழக அரசு அறிவுறுத்தல்

மதுரை, டிச. 13—

"வானொலியில் இந்திச் செய்திகளுக்கு முக்கியத்துவம் கொடுத்து மாநிலங்களில் ஒலிபரப்புவது சரியன்று; இதன் மூலம் மாநில அரசின் விவகாரங்களில் மத்திய அரசு தேவையில்லாமல் தலையிடுகிறது!

'இந்தப் பிரச்சினையைத் தமிழ்க அரசின் செய்தித் துறை டெல்லி அரசுக்கு எடுத்துக்கூறி உரிய நடவடிக்கை எடுக்கும்.

---அமைச்சர் இரா. நெடுஞ்செழியன்

காங்கிரசுத் தலைவரின் அற்ப புத்தி!

மாணவரிடை மூண்ட தகராறை ஆட்சிக்கு விரோதமாக்குவதா?

திசை திருப்பிவிடும் சுப்பிரமணியம் கூற்று -- அமைச்சர் மு. கருணாநிதி கண்டனம்

திருச்சி, டிச. 13—

"மாணவர்களிடையே ஏற்பட்ட தகராறுகளை தி. மு. கழக ஆட்சிக்கு விரோதமாக காங்கிரசுக்காரர்கள் திசை திருப்புவது நல்ல சனநாயகமல்ல"

என்று பொதுப்பணித் துறை அமைச்சர் திரு. மு. கருணாநிதி, திருச்சியில் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

சென்னையில் நடந்த மாணவர்கள் தகராறு குறித்துத் தமிழ்நாடு காங்கிரசுத் தலைவர் திரு. சி. சுப்பிரமணியம் தெரிவித்த கருத்தைக் குறிப்பிட்டே அவர் இவ்வாறு கூறினர்; அவர் மேலும் கூறியதாவது:—

"மாணவர்களிடையே ஏற்பட்ட தகராறின் அடிப்படைக் காரணத்தை சி. சுப்பிரமணியம் சொல்லியிருப்பாரேயானால், பொருத்தமாக இருந்திருக்கும்; அதை விட்டுவிட்டு மாணவர்களிடையே ஏற்பட்ட தகராறுகளைத் தி. மு. கழக ஆட்சிக்கு விரோதமாகக் காங்கிரசுக்காரர்கள் திசை திருப்புவது நல்ல சனநாயகமாகாது!

இதுபோன்று பிரச்சினைகளில் அரசியல் கட்சிகள் தலையிட்டுத் தங்கள் கட்சியை வளர்த்துக்கொள்ளப் பார்ப்பது முறையுமல்ல!

செய்தித் தாள்களும், பெற்றோர்களும் மாணவர்களுக்குத் தகுந்த அறிவுரை வழங்க வேண்டும்.

மாணவர்களும் தங்கள் கடமைகளை உணர்ந்து நடந்துகொள்வது அவர்களுக்கும் அரசுக்கும் நன்மை செய்வதாகும்."

ஐந்தாண்டில் ரூ. 100 கோடி!

இலங்கை அகதிகளுக்குச் செலவிடத் தமிழக அரசு திட்டம்

மதுரை, டிச, 13—

"இலங்கையிலிருந்து திரும்பிவரும் இந்திய மரபினரைக் குடியமர்த்துவதற்காகத் தமிழக அரசு அடுத்த ஐந்தாண்டுகளில் ரூ. 100 கோடி செலவிடத் திட்டமிட்டிருக்கிறது; இதற்காகப் பல திட்டங்கள் வகுக்கப்பட்டிருக்கின்றன"

என்று மறுவாழ்வுத்துறை ஆணையர் திரு. இராயப்பா தெரிவித்திருக்கிறார்.

இலங்கையிலிருந்து வெளியேறி வருவோரில் 21,000 குடும்பங்களை அந்தமானில் குடியமர்த்த அங்கு மேம்பாட்டு அமைப்பு ஒன்றை ஏற்படுத்த இந்திய அரசு ஆலோசித்து வருகிறது.

அடிப்படை உரிமையைப் பறிக்க அரசு முயற்சிக்கிறது

‘உரிமை நாள்’ கொண்டாடப்படும் நேரத்திலா வேலைநிறுத்தம் செய்யும் உரிமையைத் தடுக்கும் சட்டம்?

‘நேருவின் நிலையிலிருந்து சவான் மாறியது ஏன்?’

‘அதிகார போதை’தான் இந்நிலைமைக்குக் காரணமா?

புதுடில்லி, டிச. 13—

“தொழிலாளர்களின் அடிப்படை உரிமையைத் தட்டிப் பறிக்க அரசு முயற்சிக்கிறது; ‘அதிகார போதை’யும், ‘பதவிப் பசி’யும்தான் மத்திய அரசு ஊழியர்கள் வேலை நிறுத்தம் செய்யும் உரிமையைத் தடுக்கும் சட்டத்தைக் கொண்டுவரத் தூண்டியிருக்கின்றன.

“உலகம் முழுவதும், ‘மனித உரிமை நாள்’ கொண்டாடப்பட்டுவரும் இந்த நேரத்தில், தொழிலாளரின் அடிப்படை உரிமையைப் பறிக்கும் சட்டத்தின் மீது நாம் பேசிக்கொண்டிருக்கிறோமே—அதுவே வெட்கப்படவேண்டிய ஒன்றாகும்.

“இந்தச் சட்டம் நிறைவேறிவிட்டால், ‘அனைத்துலகத் தொழிலாளர் சங்க’த்தில் உறுப்பினராக இருக்க இந்தியாவுக்குத் தகுதி கிடையாது.

“இந்தச் சட்டம் நிறைவேறிவிட்டால் மட்டும் வேலைநிறுத்தம் நடக்கவே நடக்காது என்பது என்ன நிச்சயம்?

“மறைந்த தலைமையமைச்சர் நேரு, ‘வேலை நிறுத்தம் செய்யும் உரிமையைப் பறிக்கக்கூடாது’ என்றார்; ஜி. எல். நந்தாவும் இதையேதான் சொன்னார்; ஆனால் உள்துறை அமைச்சர் சவான் மட்டும் இந்நிலையிலிருந்து திடீரென ஏன் மாறினார் என்பது, எவருக்கும் புரியாத ஒன்றாக இருக்கிறது!”

—கழக உறுப்பினர் செ. கந்தப்பன்
(மக்களவையில்)

மும்மொழிக் கொள்கையை ஏற்க வேண்டுமாம்

தமிழக அரசிடம் டில்லி கோரிக்கை!

★

புதுடில்லி, டிச. 12—

“கல்வித் துறையில் மும்மொழிக் கொள்கையை ஏற்றுக்கொள்ளுமாறு தமிழக அரசை மத்திய அரசு கேட்டுக்கொண்டிருக்கிறது”

என்று மத்திய கல்வித் துறைத் துணையமைச்சர் ஷெர் சிங், நாடாளுமன்ற மேலவையில் கூறினார்.

இந்தியாவில், தமிழகம் மட்டுமே மும்மொழிக் கொள்கையை ஏற்காமல் இரு மொழிக் கொள்கையைச் செயல்படுத்தி வருவதாக அவர் தெரிவித்தார்.

மும்மொழித் திட்டத்தின்கீழ் அரியானாவில் இந்தி, ஆங்கிலம் ஆகியவற்றுடன் தமிழ் அல்லது தெலுங்கைக் கற்பிக்க அந்த மாநில அரசு முடிவு செய்திருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

புதுவை காங்கிரசிலிருந்து மற்றொரு பெரும் புள்ளி வெளியேறினார்

காரைக்கால், டிச. 12—

புதுவை மாநிலக் காங்கிரசுக் கட்சியின் துணைத் தலைவரான திரு. கே. எஸ். கோவிந்தராசு காங்கிரசுக் கட்சியிலிருந்து விலகிவிட்டதாக அறிவித்துள்ளார்.

கட்சியில் கருத்து வேற்றுமை ஏற்பட்டதன் காரணமாக கட்சிக்கு அடியோடு முழுக்குப் போட்டுவிட்டு வெளியேறிவிட்டதாகக் கூறப்படுகிறது.

மக்கள் சபையில் வெளிநடப்பு

இன்றியமையா ஊழிய மசோதாவுக்கு எதிர்ப்பு

புதுடில்லி, டிச. 12—

மத்திய அரசு ஊழியர்களின் குறைகளைக் கவனிப்பதற்காகத் தகுந்த அமைப்பு ஒன்றை ஏற்படுத்துவதற்கு வகை செய்யும் மசோதா ஒன்றைக் கொணர அரசு எண்ணியுள்ளதாக நாடாளுமன்ற மக்களவையில் உள்துறைத் துணையமைச்சர் திரு. வி. சி. சுகிலா அறிவித்தார்.

இன்றியமையா ஊழிய பராமரிப்பு மசோதாவை ஆய்வுக்கு எடுத்துக்கொள்ள முன்மொழிந்து பேசுகையில்தான் துணை அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

மசோதா கொண்டுவரப்பட்ட முறை சரியல்ல எனக் கூறி எதிர்க் கட்சி உறுப்பினர்கள் ஒழுங்குப் பிரச்சினைகள் கிளப்பினர்; ‘நிதி அறிக்கையுடன் இம்மசோதா கொண்டுவரப்படவில்லை’ என அவர்கள் எதிர்ப்புத் தெரிவித்தனர்.

துணை அவைத் தலைவர் திரு. ஆர். கே. கடில்கார், ஒழுங்குப் பிரச்சினைகளை ஏற்க மறுத்து, மசோதாவை முன்மொழியுமாறு அமைச்சரை அழைத்தார்.

இதனை எதிர்த்து பி. சோ. கட்சியைச் சேர்ந்த பெர்னாண்டசும், லக்கப்பாவும் வெளிநடப்பு செய்தனர்.

காங்கிரசு ஆளும் மாநிலத்தில் ஊழல்

ஆந்திரச் சட்டமன்றத்தில் குற்றச்சாட்டு—ஆளுங்கட்சியின் சப்பைக்கட்டு!

ஐதராபாத், டிச. 12—

ஆந்திர மாநில அரசாங்க உயர் அதிகாரியின் நெருங்கிய பெண் உறவினருக்கு 74 ஏக்கர் நிலத்தை அரசு கொடுத்தது சம்பந்தமாக ஆந்திரச் சட்டமன்றத்தில் எதிர்க் கட்சியினருக்கும்—ஆளும் காங்கிரசுக் கட்சியினருக்கும கடும் வாக்குவாதங்கள் நடந்தன.

அதையொட்டி அவையில் அரை மணி நேரம் கூச்சலும் குழப்பமும் நிலவின.

அவைத் தலைவரின் கட்டளையை உறுப்பினர்கள் பொருட்படுத்தவில்லை; எவ்வளவு உரத்தக் குரலில் பேச முடியுமோ அந்த அளவுக்குக் கூச்சலிட்டனர்.

“சம்பந்தப்பட்ட அதிகாரி அவையில் இல்லாதபோது, அவரைப் பற்றிப் பேசக்கூடாது” என்று காங்கிரசு உறுப்பினர்கள் கூறினர்.

ஜமீன் ஒழிப்பின்போது, குறிப்பிட்ட நிலத்தை அந்த அந்தப் பெண்மணி சட்டப்படி வாங்கினார் என்றும், அதில் முறைகேடு ஒன்றுமில்லை என்றும் முதலமைச்சர் பிரும்மானந்த ரெட்டி சொன்னார். அதிகாரியின் பெயரைச் சொன்னதற்காக எதிர்க் எதிர்க் கட்சியினரை அவர் கடிந்துகொண்டார்.

முதல்வரின் விளக்கம் எதிர்க் கட்சியினருக்கு மன நிறைவை ஏற்படுத்தவில்லை; எனவே அடுத்த சட்டமன்றக் கூட்டத்தில் அதுபற்றி விவரமாகப் பேச நேரம் ஒதுக்குவதாக அவைத் தலைவர் உறுதி அளித்தார்.

சென்னை, டிச. 15—

சென்னை நகரில் தீ விபத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவுவதற்காகத் தமிழக முதலமைச்சர் திரட்டிவரும் நிதிக்கு டிசம்பர் 6-ம் நாள் வந்துள்ள தொகை ரூ 1,000.

இத்துடன் மொத்தம் ரூ. 38,25,270.78.

அடிப்படை உரிமையைக் கட்டுப்படுத்தத் திட்டம்!

மனித உரிமை நாள் கொண்டாடும் நேரத்தில் நடக்கும் விசித்திரம்

இந்தியத் தலைமை நீதிபதி இடித்துரை

புதுடில்லி, டிச. 12—

“‘மனித உரிமை நாள்’ கொண்டாடப்படும் இந்த ஆண்டில் மனிதனின் அடிப்படை உரிமைகளைக் கட்டுப்படுத்துவதற்கான முயற்சிகள் நடைபெற்றுவருவது விசித்திரமாகத் தோன்றுகிறது”

என்று இந்தியத் தலைமை நீதிமன்றத் தலைமை நீதிபதியான இதயத்துல்லா, ‘மனித உரிமைகள் நாள்’ பற்றிய ஒரு நூலை வெளியிட்டுப் பேசுகையில் கூறினார்.

இந்த முயற்சிகள் என்ன என்பதை அவர் குறிப்பிட்டுச் சொல்லவில்லை; ஆனால், இந்திய அரசியலமைப்புச் சட்டத்திலுள்ள அடிப்படை உரிமைகள் பற்றிய பகுதியைத் திருத்துவதற்கு ஒரு மசோதா கொண்டுவரப்பட்டிருப்பதைத்தான் அவர் சொல்லுகிறார் என்பதை எல்லோரும் புரிந்துகொண்டார்கள்.

தலைமை நீதிபதி மேலும் பேசுகையில் குறிப்பிட்டதாவது:—

“ஆயினும், இது நாடாளுமன்றம் முடிவு செய்யவேணடிய ஒன்று; இதைப் பற்றி எனக்கு எந்தச் சம்பந்தமும் இல்லை; ஆனால், மனித உரிமைகள் நாள் கொண்டாடப்படும் ஆண்டில் இந்த முயற்சி நடப்பதுதான் வேடிக்கையாகும்.

“சொத்து வைத்துக்கொள்ளும உரிமையும் அடிப்படை உரிமைகளில் சேர்க்கப்பட்டிருப்பதால்தான் சங்கடம ஏற்பட்டிருக்கிறது, வேண்டுமானால், சட்ட பூர்வமான முறையில் அதை மாற்ற முயற்சி செய்யலாம். ஆனால் அரசியலமைப்பில் ஏற்கனவே உள்ள அடிப்படை உரிமைகளைக் குறைப்பது நாட்டின் கொள்கைகளை மாற்றுவதாகும்.”

மலிவான விலையிலேயே உணவுப்பொருட்கள் கிடைக்கின்றன

சென்னை, டிச. 15—

“இந்த ஆண்டில் 4 இலட்சம் டன் அரிசி கொள்முதல் செய்யத் தமிழக அரசு திட்டமிட்டிருக்கிறது; இதுவரையில், 2,23,000 டன் அரிசி கொள்முதல் ஆகியிருக்கிறது; மேற்கொண்டு தொடர்ந்து கொள்முதல் செய்யப்பட்டுவருகிறது.

“கிராமப்புறங்களில் உணவுப் பொருள்களின் விலைவாசிகள் உயர்ந்துவிட்டதாகக் கூறப்பட்டு வருகிறது; ஆனால் உண்மையில், விலைவாசிகள் எதுவும் உயரவில்லை; சென்ற ஆண்டு இருந்ததைவிட இந்த ஆண்டில் பொருள்கள், மலிவான விலையில் கிடைக்கின்றன.”

—உணவு அமைச்சர்
கே. ஏ. மதியழகன்
(செய்தியாளர்களிடம்)

மனித உரிமை—ஓர் அறைகூவல்!

புதுடில்லி, டிச, 13—

“நாம் ஒரு புது யுகத்தில் அடியெடுத்து வைக்கிறோம். மக்கள் தொகை பெருகி வருகிறது—வசதிகள் குறைந்து வருகின்றன!

“இத்தருணத்தில் மனித நெறிகளும், மனித உரிமைகளும் சோதனைக்குள்ளாகத்தான் செய்யும்.

“எல்லோருக்கும் கௌரவமான வாழ்வளிப்பதற்கான உத்திகள் நம்மிடையே இருந்தும்கூட, வளமிக்க நாடுகள் மேலும் வளம பெறுகின்றன! வசதி குறைந்த நாடுகளின் வசதி குறைந்து வருகிறது!

“மனித உரிமைகள் பற்றிய உலகப் பிரகடனம் ஓர் இலட்சியம் மட்டும் அல்ல—அது, நாம் ஏற்றுக்கொண்டுள்ள ஓர் அறைகூவலுமாகும்; நமது வாழ்நாளிலேயே அதன் நோக்கங்களை அடைய முடியும்!

“உலகெங்கிலும் மக்களுக்கு மனித உரிமைகளையும், அடிப்படைச் சுதந்தரத்தையும் வழங்கும் பொருட்டு, மனிதனின் தொழில் நுட்பச் சாதனைகளையும், நாடுகளின் அரசியல் ஆதரவையும் ஒன்றுதிரட்டும் நற்பணியில் மனித உரிமைகள் பற்றிய சர்வதேச ஆண்டான இந்த ஆண்டில் ஐ. நா. பேரவை ஈடுபட வேண்டும்.”

—இந்திரா காந்தி

திராவிட நாகரிகம் எங்கணும் பரவியிருந்தது

உலகம் முழுவதும் தமிழ்ப் பண்பாட்டின் அறிகுறி உள்ளது

தமிழன் எங்கு வாழ்ந்தாலும் நின்று நிலைக்க வேண்டும்

மலேசியா வாழ் தமிழர்களிடை

பேராசிரியர் க. அன்பழகன் வலியுறுத்தல்

கோலாலம்பூர், டிச. 15—

"தமிழன் எந்த நாட்டில் வாழ்ந்தாலும் அவன் மொழியால் தமிழனாகவும், வாழும் இடத்தால் அந்த நாட்டுக் குடிமகனாகவும் இருக்கவேண்டும்.

"உலகில் சில இன மக்கள் முன்னேறியதற்குக் காரணம், அவர்கள் ஆங்காங்கே நிலைத்து நிரந்தரமாக வாழ்வதேயாகும்"

என்று மலேசியாவாழ் தமிழர்களிடையே, இந்திய நாடாளுமன்ற தி.மு.க. குழுத் தலைவர் பேராசிரியர் க. அன்பழகன் பேசுகையில் வலியுறுத்திக் கூறினார்.

பகாமாவில் நடந்த நாடாளுமன்றத் துறை மாநாட்டில் கலந்து கொண்டுவிட்டுத் தாயகம் திரும்பும் வழியில் மலாசியாவிலும் சிங்கப்பூரிலும் பேராசிரியர் க. அன்பழகன் பல நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டார்.

இங்கு அக்பர் ரெஸ்டாரண்டில் நடந்த விருந்துபசரிப்பில் பேசுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

அவரோடு தமிழகச் சட்டமன்றக் காங்கிரசு உறுப்பினர் சௌந்தரராஜ மூப்பனாரும் வந்திருந்தார்.

பேராசிரியர் திரு. அன்பழகனையும் திரு. சௌந்தரராஜ மூப்பனாரையும் சிறப்பிக்க நடைபெற்ற இந்நிகழ்ச்சிக்கு திரு. தி. செல்வகணபதி தலைமை தாங்கினார். திரு. ஆழி அருள்தாஸ் வரவேற்புரையாற்றினார்.

திரு. சா.ஆ. அன்பானந்தன் வாழ்த்திதழ் வாசித்து அளித்தார்.

தமது உரையில் க. அன்பழகன் அவர்கள் கூறியதாவது:—

"சிறு அளவு பொருள் சேர்த்தால் போதும் – தாயகத்துக்குப் போய்விடலாம்; 5 ஆயிரம் அல்லது 10 ஆயிரம் ரூபாய் சேர்ந்தவுடன் போய் விடலாம்' என்றிருப்பது, எதிர்கால முன்னேற்றத்திற்குத் துணைபுரியாது.

வந்தவர்கள் போவதைப பற்றி நாம் பேச வேண்டியதில்லை. குடும்பத்தோடு நிலையாக இங்கு வாழ்பவர்கள் இதை உணர்ந்து வாழவேண்டும்.

இங்குள்ள நிலை, தமிழகத்தைக் காட்டிலும் செழிப்பானதாக உள்ளது; அறிவுக்கும் ஆற்றலுக்கும் நிறைய இடமிருக்கிறது; மக்கள்தொகை குறைவு.

சிங்கப்பூரில் இந்திய மக்களில் சிலராவது நிலைத்து வாழ்வதனால்தான் இந்திய நாடாளுமன்றத்தில் இல்லாத தமிழ், சிங்கப்பூரில் இருக்கிறது. அது போல மலேசியாவிலும் தமிழுக்கு இடம் கிடைத்திருக்கிறது.

எல்லோரும் தமிழகத்துக்குத் திரும்பினால் நெருக்கடிதான்; இது அறிவுரையல்ல -- அவசியத்தால் எழுந்த உரை!

'தமிழ் மொழி பேசும் சமூகம் உலகமெங்கும் வாழவேண்டும்' என்று கருதலாம்; இது அரசியல் பண்பாடு ஆகும்.

தமிழ்நாட்டைப் பற்றி நல்லெண்ணம் வேண்டும் -- தவறில்லை. ஆனால் இங்கேயே நீங்கள் தொடர்ந்து வாழ உறுதி கொள்ள வேண்டும்.

தமிழ் மக்கள் இங்கு நெடுங் காலத்திற்கு முன்பிருந்தே தொடர்புடையவர்கள். ஆனால் மனைவி மக்களைவிட்டு வந்ததாலோ என்னவோ -- பலர், நிரந்தரமாக வாழவில்லை! தமிழர்கள், தங்கள் நிலை அற்றுப் போகும் வண்ணம் வாழ்தல் கூடாது!

தமிழன் இலங்கையில் வாழ்ந்தாலும், இந்தோனேஷியாவில் வாழ்ந்தாலும், மோரிஸ் தீவில் வாழ்ந்தாலும், தமிழன்தான்; ஆனால், அந்தந்த நாட்டுக்குரியவனாக வாழவேண்டும்.

உலகம் முழுவதும் தமிழ்ப் பண்பாட்டின் அடையாளம் உள்ளது; ஆனால் இதற்குப் பொருந்துகிற சான்றுகள் வேண்டும்.

உங்கள் தேசிய மொழியில், 'முத்து' என்றால், 'ஒளி' என்று செனட்டர் டத்தோ உபயதுல்லா கூறினார்கள்.

சில சொற்கள் தமிழ்ச் சொற்களாக உள்ளன; வடமொழிச் சொற்களும் பல உள்ளன; சொற்கள் ஒன்றோடொன்று மோதி மோதிக் கலந்துவிடுகின்றன.

அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திற்கு வருகை தந்த ஸ்பெயின் பாதிரியார், 'நான் ஸ்பெயினைச் சேர்ந்த திராவிடன்' என்று--- நான் மாணவனாக இருந்த காலத்தில்--எனக்குக் கையெழுத்துப்போட்டுக் கொடுத்தார்.

மத்திய தரைக்கடல் நாகரிகத்தில் நமக்குள்ள பங்கு மறுக்க முடியாதது. திராவிட நாகரிகம் இங்ஙனம் எங்கும் பரவியிருந்தது எனக் கூறலாம்.

ஆனால் பழம்பெருமை தலையெடுக்குமோ இல்லையோ--- தமிழ்நாடு அரசியல் வழிகாட்டுமோ இல்லையோ,--தமிழ் மக்கள் உலகெங்கும் மேம்பட்டு வாழவேண்டும் என்ற நம்பிக்கை நமக்கு வேண்டும்; அங்ஙனம் வாழவேண்டும்."

தர்மாம்பாள் மகளிர் இலக்கிய வகுப்பு

சென்னை நக்கீரர் கழகச் சார்பில் டாக்டர் தர்மாம்பாள் மகளிர் இலக்கிய வகுப்பு, 14—12—68 பிற்பகல் 3 மணிககு தண்டையார் பேட்டை பிள்ளையார் கோவில் தெரு, 27 எண்ணுள்ள 'தமிழக'த்தில் நடைபெறும; திருமதி பார்வதி சுப்பராயன், 'சேக்கிழார் கண்ட தமிழகம்' என்ற பொருளில் பேசுவார்.

குடும்ப நலத் திட்ட விழா

குடும்ப நலத் திட்ட இரு வார விழாவையொட்டி, 14—12—68 மாலை 6-30 மணிக்கு சென்னை–பெரம்பூர் பள்ளிச் சாலையில் உள்ள மாநகராட்சி உயர்நிலைப் பள்ளித் திடலில், மேயர் திரு. வேலூர் நாராயணன் தலைமையில், சமூக நலத் துறை அமைச்சர் சத்திய வாணிமுத்து, பேராசிரியர் மா. கி. தசரதன், மு. வேதாசலம் எம்.எல்.ஏ., வி. தனிகாசலம் எம்.சி. ஆகியோர் பேசுவர்.

அமைச்சர்

மா. முத்துசாமி

சுற்றுப்பயணம்

டிச. 14 முற்பகல்: ஒரத்தநாடு தொகுதி—திரு. எல். கணேசன் எம்.எல்.ஏ. ஏற்பாடு செய்யும் நிகழ்ச்சிகளில் பங்கேற்பு; மாலை 3-மணி: காடந்தகுடி—பள்ளித் திறப்பு; 5-மணி: சிலம்பவேளாண்காடு; 7-மணி: மதுக்கூர்—பொதுமக்கள் வரவேற்பு.

டிச. 15 காலை 10-மணி: லால்குடி—ஊராட்சி ஒன்றியம் வரவேற்பு; 12-மணி: இடையாற்றுமங்கலம்—படத் திறப்பு விழா; 5-மணி: மணிகண்டம் ஊராட்சி ஒன்றியம்—நாகமங்கலம் விவசாயிகட்குக் கடன் வழங்கல்.

டிச. 16 காலை 10-30 மணி: சின்னகவுண்டனூர் – சீரணியினர் கட்டிய மதிய உணவுக்கூடம் திறப்பு; 11-30 மணி: தேரப்பாடி—சீரணியினர் கட்டிய பள்ளிக் கட்டிடத் திறப்பு; 12-மணி: பல்வார்பட்டி—சீரணியினர் கட்டிய பள்ளிக் கட்டிடத் திறப்பு; 1-மணி: ஆண்டிப்பட்டி–விவசாயக் கிடங்கு திறப்பு; மாலை 3-மணி: பாலப்பட்டி—பேரூராட்சி வரவேற்பு; மாலை 4-மணி: மக்கள் மன்றத் திறப்பு; 5-மணி: பறையூர் பள்ளிக் கட்டிடத் திறப்பு; 6-மணி: அரவாக்குறிச்சி—ஊராட்சி வரவேற்பு; 7-மணி: பொதுக்கூட்டம்.

அமைச்சர்

கே. ஏ. மதியழகன்

சுற்றுப்பயணம்

டிச. 14 காலை 9-மணி: பாளையங்கோட்டை—குருடர் பள்ளி மாணவர்கள் செய்த பொருள்கள் விற்பனைத் துவக்க விழா; 10-30 மணி: கீழவல்லநாடு—ஊராட்சி அலுவலகக் கட்டிடத் திறப்பு; காய்கறி வகைகள், பழச் செடிகள் வழங்குதல்; 11-30 மணி: வாசவப்புரம்—ஊராட்சி அலுவலகக் கட்டிடத் திறப்பு; பழச் செடிகள் நடுதல்; மேனிலை நீர்த் தொட்டித் திறப்பு; பிற்பகல் 12-30 மணி: செய்துங்கநல்லூர்—ஊராட்சி வரவேற்பு; தோட்ட விவசாயக் கடன் வழங்கல்; 1-30 மணி: கருங்குளம்—ஊராட்சி வரவேற்பு; மாலை 5 30 மணி: பத்மனேரி—வானொலி நிலையத் திறப்பு; இரவு 8-30 மணி: நெல்லை—பொதுக்கூட்டம்.

டிச. 15: கோவை.

டிச. 16 மாலை 5-மணி: அவினாசிலிங்கம்—குடும்பக் கலைக் கல்லூரி.

புலவர் பொன்னிவளவன்

சுற்றுப்பயணம்

டிச. 14: பெங்களூர் கன்டோன்மெண்ட்; 15 காலை: பெங்களூர் எழுத்தாளர் மன்ற இலக்கியக் கூட்டம்; மாலை: பெங்களூர் நகர் பொதுக்கூட்டம்; 22: குரும்பேரி; 24: திட்டக்குடி; 26: பட்டுக்கோட்டை; 29: வாசுதேவநல்லூர்.

கா. காளிமுத்து நிகழ்ச்சிகள்

டிச. 14: காக்கூர்; 15: திருச்சி; 20: உசிலம்பட்டி; 21: பொள்ளாச்சி; 22: திண்டுக்கல்; 24, 25: நாகர்கோயில்.

14: முதுகுடி; 15: பெருநாழி; 25: மண்டலமாணிக்கம்; 26: சாத்தூர்.

அமைச்சர்

ஏ. கோவிந்தசாமி

சுற்றுப்பயணம்

டிச. 14 காலை 9-மணி: வடமுதியூர்—பள்ளிக் கட்டிடத் திறப்பு விழா; 10-மணி: கலபப்பாக்கம்—ஊராட்சி ஒன்றிய வரவேற்பு; 11-மணி: கலசப்பாக்கம்—சமுதாய நலக் கிணறு வேலைத் துவக்கம்; பகல் 12-மணி: அருணகிரிமங்கலம் — மேநிலை குடிநீர்த் தொட்டி திறப்பு விழா; மாலை 4-மணி: சாலமேடு—பள்ளிக் கட்டிட அடிக்கல் நாட்டு விழா; 5-மணி: மேல்சிறுவள்ளூர்—பள்ளிக் கட்டிட அடிக்கல் நாட்டு விழா; இரவு 7-மணி: சேத்துப்பட்டு.

டிச. 16 காலை 9-மணி: பெருங்காட்டூர் (செய்யாறு வட்டம்)—பட்டா வழங்குதல்; 10-30 மணி: வெண்பாக்கம்—பட்டா வழங்குதல்; பகல் 12-மணி: தூசி—பட்டா வழங்குதல்; 1-30 மணி: வீரம்பாக்கம்—பட்டா வழங்குதல்; பிற்பகல் 3-மணி: அனக்காவூர்—பட்டா வழங்குதல்; மாலை 4-30 மணி: வாழ்குடை–பட்டா வழங்குதல்; இரவு 7-மணி: செய்யாறு—பட்டா வழங்குதல்.

அமைச்சர்

செ. மாதவன்

நிகழ்ச்சிகள்

டிச. 14 காலை 10-30 மணி: திருச்சி மாவட்ட கூட்டுறவு விநியோக விற்பனைச் சங்க வெள்ளி விழாவில் பங்கேற்பு; மாலை 4 மணி: பூவாளூர் கூட்டுறவுச் சங்க வெள்ளிவிழா; 6-மணி: திருச்சி–மார்க்கெட் குழு ஏற்பாடு செய்துள்ள அண்ணா படத் திறப்பு விழா; இரவு 7-30 மணி: மார்க் குழு உறுப்பினர்கள் அளிக்கும் விருந்து.

மருத்துவர்கள் இல்லாத இடங்களில் கம்பவுண்டர்கள்

கிராம மக்கள் குறை போக்க மாற்று ஏற்பாடு

தமிழக அரசு சுகாதாரத்துறை அதிகாரி விளக்கம்

சென்னை, டிச. 12—

அனுபவம் உள்ள கம்பவுண்டர்களை டாக்டர்களாக நியமிக்க அரசு திட்டமிட்டு இருப்பதாக வெளியான செய்தி குறித்துத் தமிழக அரசு சுகாதாரத் துணைச் செயலாளர் அனந்தபத்மநாபன், நிருபர்களிடம் கூறியதாவது:—

"10 ஆண்டு அனுபவம் உள்ள கம்பவுண்டர்கள், டாக்டர்கள் ஆக்கப்படுவார்கள் என்று பத்திரிகைகளில் வந்த செய்தி தவறு.

கிராமப்புறங்களில் உள்ள மருத்துவமனைகளில் போதிய டாக்டர்கள் இல்லாமல் மக்கள் அவதிப்படுகிறார்கள். அவர்களின் குறைகளைப் போக்க கம்பவுண்டர்களை அங்கு நியமிக்கலாம் என்று யோசனை செய்தோம்.

அவ்வாறு தேர்ந்தெடுக்கப்படும் கம்பவுண்டர்களுக்கும் சில அடிப்படைத்தகுதிகள் இருக்க வேண்டும்.

அவ்வாறு நியமிக்கப்படக் கூடியவர்கள், பதிவு பெற்ற டாக்டர்களாகக் கருதப்படமாட்டார்கள்.

ஆகவே, தங்களுடைய எதிர்காலம் பாதிக்கப்படும் என்று மருத்துவக் கல்லூரி மாணவர்களும், பயிற்சி பெறும் இளம் மருத்துவர்களும் கவலைப்படத் தேவை இல்லை."

சீரணியினரின் துப்புரவுப் பணி

"சென்னை துறைமுகப் பகுதியைச் சேர்ந்த 11 முதல் 20 வரை உள்ள வட்டங்களின் சீரணித் தொண்டர்கள் 15–12–68 முதல் தொடர்ந்து ஒவ்வொரு வாரமும் ஞாயிற்றுக்கிழமை தங்கள் வட்டங்களில் துப்புரவு வேலையும் சீரணிப் பிரச்சாரமும் நடத்துவார்கள்"

என்று, துறைமுகப் பகுதிச் சீரணித் தலைவர் எஸ். வி. சி. லிங்கம் அறிவிக்கிறார்.

சென்னை மாவட்ட தி. மு. க. சார்பில்

'அண்ணா சிகிச்சை நிதி' அளிப்புவிழாக்கூட்டம்

★

14--12--68 சனி மாலை 7 மணிக்கு

சென்னை 36-வது வட்டம் சூளை மேடக்ஸ் சாலையில்

(அஞ்சலகம் அருகில்)

தலைவர்: டி. கே. கபாலி

பேசுவோர்:
மு. கருணாநிதி
என். வி. நடராசன் எம்.எல்.சி.
மேயர் வேலூர் நாராயணன்
நீலநாராயணன்
வி. எஸ். கோவிந்தராசன் எம்.எல் ஏ.

[ஐந்து ரூபாய்க்கு மேல் அண்ணா சிகிச்சை நிதிக்கு அளிப்பவர்கள் பொருளாளர் கருணாநிதி அவர்களிடம் கூட்ட மேடையில் நேரில் அளித்திடும் விதத்தில் வசதி செய்யப்பட்டுள்ளது]

மனித உணவை எலிகட்குப் படைக்கும் மடமை

வடநாட்டுக் கோயிலில் நடக்கும் நிகழ்ச்சி--வெளிநாட்டு ஏடு ஏளனம்

நாடாளுமன்றத்தில் கேள்வி --- தலைமையமைச்சர் 'தலைகுனிவான' பதில்

புதுடில்லி, டிச. 13—

மனிதர்களுக்கே உணவுத் தானியங்கள் கிடைப்பது அரிதாக இருக்கையில், கோயில்களில் எலிகளுக்கு உணவுத் தானியம் படைப்பதைத் தலைமையமைச்சர் இந்திரா காந்தி கண்டித்தார்; 'தமக்கு இந்தப் பழக்கம் சரியானதாகப் படவில்லை' என்றும் அவர் கூறினார்.

இந்தியாவில், குறிப்பிட்ட கோயில் ஒன்றில் எலிகளுக்கு ஏராளமான உணவுத் தானியம் தரப்படுவதாகவும், இது உணவு நெருக்கடியில் கொண்டுவந்து விட்டிருக்கிறதென்றும் மேற்கு ஜெர்மன் கிழமை ஏடு ஒன்றில் கட்டுரை வெளியாகியுள்ளது. அதுபற்றி இன்று நாடாளுமன்ற மேலவையில் கேள்வி எழுந்தது; தொடர்ந்து எழுந்த துணைக்கேள்விகளுக்குப் பதிலளிக்கையிலேயே இந்திரா காந்தி அவ்வாறு கூறினார்.

மூலக் கேள்விக்குப் பதிலளித்த துணையமைச்சர் சுரேந்திர பால் சிங் கூறியதாவது:—

"அக்கட்டுரைத் தகவல் முழுக்க முழுக்கத் தவறில்லையாதலால, மறுப்பு எதையும் வெளியிடுவது அவசியம் எனக் கருதப்படவில்லை."

திரு. அபித் அலியின் துணைக் கேள்விக்குப் பதிலளிக்கையில், தலைமையமைச்சர் இந்திரா காந்தி குறிப்பிட்டதாவது:—

"இந்த விவகாரத்தில் உண்மை நமக்குச் சாதகமாக இல்லை' மனித உயிர்களின் வாழ்க்கைக்குத் தேவைப்படுகின்ற உணவுத் தானியம் எலிகளுக்குத் தரப்படுகிறது என்பதே உண்மை."

பந்தாரி: — "இந்தக் கட்டுரை பிக்கானிர் கோயில் ஒன்றில் நிலவும் பழக்கத்தைத்தானே குறிப்பிடுகிறது? எலிகளுக்கு எவ்வளவு தானியம் இந்த வகையில் தரப்படுகிறது?"

தலைமையமைச்சர்: — "குழந்தைகள் உட்பட ஏராளமான பேர் பற்ருக்குறையின் தாக்குதலுக்கு இரையாகி வாடுகையில், எலிகட்கு உணவளிக்க நாள்தோறும் 50 கிலோ கிராம் பஜ்ரா தரப்படுகிறது; பஜ்ரா மட்டுமல்ல — கோதுமையும், பிறவும்கூட அந்தக் கோயில் தெய்வத்துக்குப் படைக்கப்பட்டு, அவை எலி முதலியவற்றிற்குத் தரப்படுகின்றன."

டாக்டர் மத்தியாஸ் மனுத் தாக்கல்

சுயேச்சை வேட்பாளராகப் போட்டியிடுகிறார்

நாகர்கோயில், டிச. 12—

நர்கர்கோயில் நாடாளுமன்றத் தொகுதி இடைத்தேர்தலில் சுயேச்சை வேட்பாளராகப் போட்டியிடுவதற்கான தமது வேட்பு மனுவை, டாக்டர் எம். மத்தியாஸ் இன்று பகல் 12-40 மணிக்கு தாக்கல் செய்தார்.

அவருக்கு மாற்று வேட்பாளராக நாகர்கோயில் நகராட்சியின் முன்னாள் தலைவர் ஜி. கிரிஸ்டோபர் (சுயேச்சை) வேட்பு மனுத் தாக்கல் செய்தார்.

டாக்டர் மத்தியாஸ் சுயேச்சை வேட்பாளராக மனுத் தாக்கல் செய்துள்ளது பற்றிச் செய்தியாளர்கள் தமிழ்நாடு சுதந்தராக் கட்சியின் பொதுச்செயலாளர் எஸ். எஸ். மாரிசாமியிடம் கேட்டனர்; 'டாக்டர் மத்தியாஸ் சுயேச்சையாக வேட்பு மனுத் தாக்கல் செய்திருந்தபோதிலும் தொடர்ந்து அம்மாவட்ட சுதந்தராக் கட்சியின் தலைவராக இருந்துவருவார்' என்று அவர் தெரிவித்தார்.

தொகுதி நிலவரத்தைத் தாமதமாக ஆராய்ந்த பின் சுயேச்சை வேட்பாளராக நிற்பதற்குத் தம்மை அனுமதிக்குமாறு டாக்டர் மத்தியாஸ் கேட்டார்; அவ்வாறு போட்டியிட அவர் அனுமதிக்கப்பட்டிருக்கிறார்.

இத்தொகுதியில் போட்டியிட வேட்பு மனுத் தாக்கல் செய்வதற்கு இன்றே கடைசி நாள்.

வேட்பு மனுக்கள் தாக்கல் செய்துள்ள மற்றவர்கள் விவரம் வருமாறு:—

காமராசர் (காங்கிரசு)
எம். எம். அலி (மார்க்சிஸ்டு)
துரைசாமி நாடார் (சுயே.)
விவேகானந்தன் (குடியரசு)
இராசகோபாலாச்சாரி (சுயே.)
அங்கண்ண செட்டியார் (சுயே-தருமபுரி மாவட்டத்தைச் சேர்ந்தவர்).

குழுக் கூட்டங்கள்

திருச்சி நகரம்

திருச்சி நகர தி. மு. க. பொது உறுப்பினர் கூட்டம் 14—12—68 இரவு 9-மணிக்கு நகராட்சி சத்திரத்தில் நடைபெறும்; பொது உறுப்பினர்கள் தங்கள் உறுப்பினர் உரிமைச் சீட்டுடன் வருமாறு நகரச் செயலாளர் எஸ். ஏ. ஜி. ராபி கேட்டுக்கொள்கிறார்.

தெங்காசி வட்டம்

தென்காசி வட்ட தி. மு. க. கூட்டம், 15—12—68 காலை 10-30 மணிக்கு ஆலங்குளம் கழகப் பணிமனையில் நடைபெறும்; கிளைக் கழகச் செயலாளர்களும், வட்டப் பிரதிநிதிகளும் தவருது கலந்து கொள்ளுமாறு வட்டச் செயலாளர் அ. இராமநாதன் கேட்டுக்கொள்கிறார்.

தொண்டாமுத்தூர் தொகுதி

"தொண்டாமுத்தூர் தொகுதியில் உள்ள கிளைக் கழகச் செயலாளர்கள், வட்டப் பிரதிநிதிகள் கூட்டம், 15-12-68 காலை 10 மணிக்கு, கோவை தெப்பக்குளம்வீதி கழகப் பணிமனையில் நடைபெறும்" என்று கோவை வட்டச் செயலாளர் தெ. கு. மெய்யப்பன் அறிவிக்கிறார்.

சைதை வட்டம்

சைதை வட்ட தி. மு. க. உறுப்பினர் கூட்டம், 15—12—68 காலை 9-30 மணிக்கு திருவொற்றியூர் சன்னதித் தெரு 18 எண்ணுள்ள கட்டிடத்தில் நடைபெறும்; சிறப்பு அழைப்பாளர்களாக பொதுக்குழு உறுப்பினர்களும், சட்டமன்ற—நாடாளுமன்ற உறுப்பினர்களும் கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்" என்று வட்டச் செயலாளர் பம்மல் நல்லதம்பி அறிவிக்கிறார்.

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக திரு. இரா. செழியன் எம்.ஏ., எம்.பி அவர்களை ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும், அச்சிடுபவராகவும் கொண்டு அழகிரி அச்சகத்தில் (24, சூரியநாராயண செட்டித் தெரு, சென்னை-13. அச்சிட்டு வெளியிடப்படுகிறது.

நடக்க இருப்பவை

14--12--68

சேத்துப்பட்டு (வ ஆ)

தி. மு. க. சார்பில் மாலை 7-மணிக்கு கடைத் தெருவில்; தலைவர்: சி. எஸ். பத்மநாபன்; பேசுவோர்: அமைச்சர் ஏ. கோவிந்தசாமி, கோ. விசுவநாதன் எம்.பி., ஆர்.என். அரங்கநாதன் எம்.எல்.ஏ., என். வீராசாமி எம்.எல்.ஏ., ஆர். ஆர். முனுசாமி எம்.எல்.ஏ., எஸ். முருகையன் எம்.எல்.ஏ., தொ. ப. சீனிவாசன், பரந்தாமன், மற்றும் மலர்.

ஆழ்வார்புரம் (மதுரை)

இளைஞர் எழுச்சி மன்றச் சார்பில் மாலை 7-மணிக்கு மரக்கடை வீதியில்; தலைவர்: பொ. இராமச்சந்திரன்; பேசுவோர்: அமைச்சர் இரா. நெடுஞ்செழியன், எஸ். முத்து எம்.எல்.சி., கு. திருப்பதி, பி. எஸ். மணியம், எஸ். காவேரி மணியன், மற்றும் பலர்.

மாநகராட்சி வட்டாரக் குழுத் தேர்தல்

கழகக்கூட்டணிக்கு 7-- காங்கிரசுக்கு 5 இடங்கள்

சென்னை, டிச. 12—

சென்னை மாநகராட்சியில் உள்ள 12 வட்டாரக் குழுக்களின் தலைவர் தேர்தல் மேயர் வேலூர் நாராயணன் தலைமையில் நடந்தது.

சென்னை நகரில் உள்ள 12 சட்டமன்றத் தொகுதிகளும் 12 வட்டாரங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளன.

ஒவ்வொரு வட்டாரத்திலும் 10 மாநகராட்சி உறுப்பினர்கள் உள்ளனர்.

வட்டாரக் குழுத் தலைவர்களின் தேர்தலில் தேர்ந்தெடுக்கப்பட்ட 12-பேரில் 5-பேர் தி. மு. க.-வினர்; 5-பேர் காங்கிரசுக்காரர்கள்; ஒருவர் வலதுசாரிக் கம்யூனிஸ்டு; ஒருவர் இடதுசாரிக் கம்யூனிஸ்டு.

இரு கம்யூனிஸ்டு உறுப்பினர்களும் தி. மு. க. ஆதரவுபெற்றுத் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள்.

ஒவ்வொரு வட்டாரத்திலும் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர் பெயர் வருமாறு:—

1. வண்ணரப்பேட்டை — எம். பெருமாள் (8-வது வட்டம்—தி. மு. க.).
2. துறைமுகம்—பி. இராமமூர்த்தி (17-வது வட்டம்—காங்கிரசு).
3. பேசின்பிரிட்ஜ் — ஜி. கண்ணன் (23-வது வட்டம்—வலதுசாரிக் கம்யூனிஸ்டு).
4. பார்க் டவுன்—எம். பக்தவத்சலம் (33-வது வட்டம்—காங்கிரசு).
5. பெரம்பூர்—எம். கன்னியப்பன் (46-வது வட்டம்—தி. மு. க.)
6. புரசைவாக்கம்—ஏ. பி. சீதாபதி (51-வது வட்டம்—இடது கம்யூனிஸ்டு).
7. எழும்பூர் — எம். இராசகோபால் (68-வது வட்டம்—காங்கிரசு).
8. ஆயிரம்விளக்கு — பி. கே. கேசவன் (71-வது வட்டம்—தி. மு. க).
9. திருவல்லிக்கேணி—கே. வெங்கட் (81-வது வட்டம்—(காங்கிரசு).
10. மயிலாப்பூர்—டி. சாரங்கன் (96-வது வட்டம்—தி. மு. க.)
11. தியாகராயநகர்—ஆர். கண்ணப்பன் (104-வது வட்டம்—காங்கிரசு).
12. சைதாப்பேட்டை—கோ. அய்யாவு (115-வது வட்டம்—தி. மு. க.).

அறிஞர் அண்ணா

சிகிச்சை நிதி

அறிஞர் அண்ணா சிகிச்சை நிதிக்காகத் தோகை அனுப்புமாறு கழகப் பொருளாளர் மு. கருணாநிதி அவர்கள் விடுத்த வேண்டுகோளுக்கேற்ப நிதியளித்த தோழர்கள்:—

	ரூ. காசு
நேற்றைய இதழ்த் தொடர்ச்சி	27,190.32
சி. சிட்டிபாபு எம்.பி.	500.00
அரூர் முத்து எம்.பி.	500.00
தில்லைவில்லாளன் எம்.பி., சிதம்பரம்	500.00
'குமுதம்' டிரஸ்ட் சார்பாக--எஸ்.ஏ.பி. அண்ணாமலை மூலம்	500.00
சிவகாசி சி. சு. அண்ணாமலை	101.00
சென்னை 6-வது வட்ட மாநகராட்சி உறுப்பினர் கே. குசால்தாஸ்	25.00
வாணியம்பாடி எஸ்.ஏ.பி. இராசசேகரன்	11.11
சென்னை-1 பந்தர் தெரு கா. மு. ஏகாம்பரம்	101.00
சிதம்பரம் நகராட்சித் தலைவர் வி. வி. சுவாமிநாதன்	101.00
இராசிபுரம் டாக்டர் இரா. நைனமலை எம்.பி.பி.எஸ்.	100.00
கோவை ஆர். எஸ். புரம் பி. எஸ். ஜானகிராம்	51.00
திருச்சி-8 மயிலம்சந்தை ஏ. ஜோசப்	51.00
கோத்தகிரி மினிதேன் ஜே. பி. ஆலாகவுடர்	50.00
மின்பாறை தி. மு. க. கிளை சார்பாக சம்பூர்ணம் சுப்பையன்	41 00
காரைக்குடி நகராட்சி உறுப்பினர் அ. நடராசன்	25.00
திருக்காளப்பட்டி அரு. இராமன்	25.00
மதுரை பால்ராஜ் நண்பர்கள்	25.00
ரங்கநாதபுரம் ஆர். பி. சுப்பையா	25.00
திருவரங்கம் கலைவாணர் படிப்பகம்	15.00
நாகை அழகிரி மன்றம் எம். எஸ். மணி	15.00
காயல்பட்டணம் எம். எம். மீர் முகமது	11.00
குடியேற்றம் தாணம்பேட்டை மு. இராசகோபால்	10.00
,, ஜாப்ராபேட்டை ஊராட்சித் தலைவர் இராமச்சந்திரன்	10.00
சென்னை-28 க. பாஸ்கர்	10 00
தருமபுரி-1 இராசகோபாலன்	10.00
,, இர. ப. சுப்பிரமணியன்	10.00
கொமாரபாளையம் நா. இரகுராமன்	10.00
திருச்சி-14 ஜி. முருகேசன்	10.00
திண்டுக்கல் எம். ஜி. ஆர். மன்றம் கே. மாரி	10.00
பண்ணைக்காடு கே. எஸ். ஆர். வெங்கடாசலம்	10.00
பெரியகுளம்—தென்கரை கா. நடேசன்	10.00
சென்னை-38. கசு. இராசப்பன்	8.00
செம்புநாதபுரம் வை. கிருஷ்ணசாமி	5 00
கோமல் கே. எஸ். பழனிவேலுப் பிள்ளை	5.00
குடந்தை கே. சந்தானராமன்	5.00
திருச்சி-8. கே. எஸ். சுல்தான்	5.00
சின்னளப்பட்டி என். காசிலிங்கம்	5.00
குமரி மார்த்தாண்டபுரம் சி. ஆறுமுகப்பெருமாள்	5.00
குமரி மைலாடி கு. நரசிங்கமூர்த்தி	5 00
கூட்டப்புளி தி. மு. க. சு. கஸ்மீர்ராசு	5.00
திருமானூர் க. தங்கராசன்	5.00
கொண்டயம்பள்ளி ஏ. சுப்பிரமணி	5 60
தூத்துக்குடி சா. கணபதி	5 00
கோவை-1. ஆர். இராமசாமி	5.00
சென்னை-11 சு. சுந்தரேசன்	5.00
ரூ. 3 வீதம் அனுப்பியவர்கள்:—	
விசயபுரம் வெங்கிட்டுசாமி பிள்ளை, மேட்டுப்பாளையம் கே. அன்பரசு ஆகிய இரண்டுபேர்	6.00
ரூ. 2 வீதம் அனுப்பியவர்கள்:—	
திருமங்கலம் ந. தனுஷ்கோடி, மேல்சீசமங்கலம் மு. ஏழுமலை, மேலவாழக்கரை எஸ். வி. நட்ராசன், திருமானூர் எஸ். கோவிந்தராசன், கரூர் வீரப்பன் ஆகிய 5-பேர்	10 00
ரூ. 1 வீதம் அனுப்பியவர்கள்:—	
வளவனூர் என். இராசகுரு, ப. ஆ. இசுமாயில்--சென்னை, திங்களூர் ப. இராசகோபாலன், பாளையங்கோட்டை ப. ஒளிமுத்துக் கோனர், நெய்வேலி சா. கோவிந்தராசு, வடக்கநந்தல் வ. நா. அண்ணாதுரை, பவானி பொ. தனக்கோடியம்மாள் ஆகிய 7 பேர்	7.00
ஆக மொத்தம்	**30,160.03**

தஞ்சை மாவட்ட தி.மு.க. குழுக் கூட்டம்

"தஞ்சை மாவட்ட தி. மு. க. குழுக் கூட்டம், 15—12—68 காலை 10 மணிக்கு மன்னார்குடியில் நடைபெறும்; அதுபோது, நகராட்சித் தேர்தல் பற்றியும், விவசாயப் பிரச்சினை குறித்தும் விவாதிக்கப்படும்" என்று மாவட்டச் செயலாளர் மன்னை நாராயணசாமி அறிவிக்கிறார்.

அமைச்சர்

சாதிக் பாட்சா

சுற்றுப்பயணம்

டிச. 15 காலை 10-30 மணி; கோவை—மருத்துவக் கல்லூரியையும், தலைமை மருத்துவமனையையும் பார்வையிடல்; மாலை 5-மணி: தலைமை மருத்துவமனையில் மகப்பேறுப் பகுதியைத் திறந்துவைத்தல்; 6-30 மணி: நல்லரட்டிபாளையம்—ஆரம்ப சுகாதார நிலையத்தைப் பார்வையிடல்.

டிச. 16, 17: உடுமலைப்பேட்டைத் தொகுதிப் பணி.